**தலைப்பு 249 – திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தலைப்பு 249 – திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 30 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தித்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 ஆகஸ்ட் 01 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்களின் மூலம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளதாக என் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுகளுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

### 2.1.1 வருமானங்களை மதிப்பீடு செய்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தினால் 2023 ஆம் ஆண்டுக்காக 12 வருமான குறியீட்டு இலக்கங்களின் கீழ் ரூபா 90,070,000,000 ஆன வருமானம் மதிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அனைத்து வருமான குறியீட்டு இலக்கங்களின் அடிப்படை வருமான மதிப்பீடுகள் திருத்தப்பட்ருந்தன. 03 வருமானக் குறியீட்டு இலக்கங்களின் மொத்த வருமான மதிப்பீடு ரூபா 23,100,000,000 இனால் குறைக்கப்பட்டிருந்தது. 09 வருமானக் குறியீட்டு இலக்கங்களின் மொத்த வருமான மதிப்பீடு ரூபா 44,980,000,000 இனால் அதிகரிக்கப்பட்டிருந்தது. 2003.05.00 திறைசேரி பிணை முறி மிகை அறவீடு மொத்த வருமான மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட ரூபா 31,000,000,000 வருமானம் ரூபா 13,000,000,000 இனால் குறைக்கப்பட்டு வருமான மதிப்பீடு திருத்தப்பட்டிருந்தது. ஒட்டுமொத்தமாக | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். 2022 ஆம் ஆண்டில் 2023 ஆம் ஆண்டிற்குரிய மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது நிலவிய பொருளாதார நிலைமையின் மீது வருமான முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. எனினும் குறித்த நிதியாண்டின் முதல் 06 மாதங்களில் உண்மையான வருமான சேகரிக்கும் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு அந்த வருமானத் தலைப்புகளின் மதிப்பீடுகள் திருத்தப்பட்டன. அந்த வருமானத் தலைப்புகளின் கீழ் செய்யப்படும் உண்மையான சேகரிப்பு நேரடியாக பொருளாதார நிலைமை மீது போன்றே அரசாங்கத்தினால் அந்தந்த காலகட்டங்களில் எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானங்கள், நிதிச் சந்தை நிலைமைகளின் மீது | நி.பி. 85 இல் குறிப்பிட்ட ஏற்பாடுகளை கவனத்திற்கொண்டு சரியான மற்றும் நடைமுறை சாத்தியமான வருமான மதிப்பீடுகளைத் தயாரிக்க வேணடும். |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்தினால் ஆரம்ப வருமான மதிப்பீட்டின் பிரகாரம் சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை ரூபா 21,880,000,000 இனால் அதிகரித்து மதிப்பீடு திருத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டு இறுதி அளவில் 12 வருமான குறியீடுகளிலிருந்து ரூபா 391,279,705,499 வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அவற்றில் 11 வருமான குறியீடுகளில் ஆரம்ப வருமான மதிப்பீட்டை விஞ்சி வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருமான மதிப்பீடு மற்றும் அவற்றின் திருத்தம் யதார்த்தமான அடிப்படையில் செய்யப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | அடிப்படையாவதால் அதனை விட நடைமுறை சாத்தியமான வருமான தலைப்பின் கீழ் மதிப்பீடு தயாரித்தல் கடினம் என அறிவிக்கிறேன். | |
| (ஆ) | திருத்தப்பட்ட வருமான மதிப்பீடுகளை, உண்மையான வருமானத்துடன் ஒப்பிடும் போது 7 வருமானக் குறியீட்டு இலக்களிற்குரியதாக 59 சதவீதம் முதல் 510 சதவீதம் வரையான வீச்சினுள் வேறுபட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். | -மேற்படி- |

**2.1.2 நிலுவை வருமானங்களை சேகரித்தல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 08 வருமானக் குறியீடுகளிறகுரியதாக நிலுவை வருமானம் ரூபா 2,434,967,737 ஆனதுடன் அவற்றில் ஒராண்டை விஞ்சிய நிலுவை வருமானம் ரூபா 2,240,661,755 ஆக இருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். | நிலுவை வருமானத்தை அறவிட வினைத்திறனாக நடவடிக்கை எடுக்க வேண்டும |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள நிலுவை வருமானத்திற்கு ஒப்பாக 2023 திசெம்பர் 31 திகதியளவில் மொத்த நிலுவை வருமானம் நுற்றிற்கு 100 சதவீதம் குறைவடைந்தது முதல் 91 சதவீதம் அதிகரித்துள்ளது வரையான வீச்சிளவில் வேறுபட்டிருந்தது. | | |

| | | | |
|---|---|---|---|
| (i). | பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் வருமானக் குறியீட்டு இலக்கம் 20.03.02.99 இன் கீழ் 2018 திசெம்பர் 31 திகதிக்கு முன் காணப்பட்ட திரண்ட நிலுவைத் மீதி ரூபா 259,079 தொகையும் 2020 ஆம் ஆண்டிற்குரியதான ரூபா 232,927 தொகையுமாக கூட்டத்தொகை ரூபா 492,006 பெறுமதி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பெறுமான தேய்வு அடிப்படையின் கீழ் வழங்கப்பட்ட அலுவலக உபகரணங்களுக்காக அறவிடப்பட வேண்டிய தொகையானதுடன், இந்த நிலுவைத் தொகை குறித்த உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படாததனால் மற்றும் மரணித்தன் காரணமாக அறவிட முடியாதிருந்தது. இந்த நிலுவைத் தொகை 5 ஆண்டுகளாக முன் கொண்டு வரப்படுவதுடன், இந்த தொகையை அறவிட முடியாது என அறிவித்து நிதிப்பிரமாணம் 113 பிரகாரம் பதிவழிப்பதற்காக 2024 சனவரி 17 திகதி அரச நிதி திணைகளத்திடம அங்கீகாரம் கோரப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். | -மேற்படி- |
| (ii). | வருமானக் குறியீடு இலக்கம் 20.02.02.99 வட்டி (ஏனைய) இன் கீழ் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் 2020 திசெம்பர் 31 க்கு முன் நிலவிய ரூபா 193,904 மற்றும் 2021 முதல் 2023 திசெம்பர் 31 வரை நிலவிய ரூபா 111,936 உமாக கூட்டு பெறுமதி ரூபா 305,840 ஆன நிலுவை கடன் மீதியை அறவிட இயலுமை இல்லையெனவும், அதன் பிரகாரம் நிதிப்பிரமாணம் 113 பிரகாரம் அத் தொகையை அகற்றுவதற்கு 2024 சனவரி 17 ஆம் திகதி அரச நிதித் திணைக்களத்திற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (iii) | வருமானக் குறியீட்டு இலக்கம் 20.06.04.00 மூலதன வருமானம் - கடன் மீளஅறவீட்டின் கீழ் இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் மற்றும் ம/ப பதுளை மாவட்ட சணச சங்கத்திற்குரியதாக 2018 திசெம்பர் 31 வரை முறையே ரூபா 763,814,250 மற்றும் ரூபா 111,114,479 ஆக கூட்டுத்தொகை ரூபா 874,928,729 ஆன நிலுவை வருமான மீதியொன்றை மற்றும் வருமானக் குறியீட்டு இலக்கம் 20.02.02.01 வட்டி - கடன் வழங்களின் கீழ் குறித்த நிறுவனங்களுக்குரியதாக முறையே ரூபா 612,893,552 மற்றும் ரூபா 2,814,035 மற்றும் சர்வோதய பொருளாதார தொழில் முயற்சி அபிவிருத்தி சேவை (உத்தரவாத) லிமிடட் இற்கான ரூபா 296,351,801 ஆக கூட்டுத்தொகை ரூபா 912,059,388 ஆன நிலுவை வட்டி வருமானமொன்றும், 2018 ஆண்டிற்கு முன்னரிலிருந்து முன்கொண்டு வரப்படுவதுடன், இந்த வருமானத்தை அறவிடுவது தொடர்பாக நிச்சயமற்ற தன்மை நிலவியதென அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். | -மேற்படி- |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீணடெழும் செலவின விடயங்கள் 07 இற்காக அதிக ஏற்பபாடு வழங்கியதன் காரணமாக, அந் ஏற்பாடுகளை ஆண்டினுள் பயன்படுத்திய பின்னர் ரூபா 1,596,901,410 மீதியொன்று இருந்ததுடன், அம் மீதி தேறிய ஏற்பாட்டில் 27 சதவீதம் முதல் 57 சதவீதத்திற்கு இடைலான் சதவீத வீச்சளவை கொண்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். | நி.பி. 50 பிரகாரம் மதிப்பீடு சரியாக மற்றும் நடைமுறை சாத்தியமாக தயாரிக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆரம்ப செலவின மதிப்பீட்டை மற்றும் திருத்தப்பட்ட செலவின மதிப்பீட்டோடு ஒப்பிடும் போது 8 செலவின விடயங்களிற்குரியதான வேறுபாடு 33 சதவீதம் குறைவதடைவு முதல் 568 சதவீதம் அதிகரிப்பு வரையான வீச்சினுள் வேறுபட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். | -மேற்படி- |

## 2.3 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெறாது நடாத்திச் செல்லப்படும், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத் தொகை ரூபா 228,825,376 ஆன 12 வைப்பு கணக்குகள் காணப்பட்டன. இந்த வைப்பு கணக்குகளில் 11 கணக்குகள் வெளிநாட்டு மானியம் பெறுவனவுக்குரியதானதுடன், ஒரு வைப்பு கணக்கு மூன்றாம் தரப்பினருக்கு திருப்பிச் செலுத்துவதற்காக தற்காலிகமாக வைத்திருக்கும் வைப்புகளுக்குரியதாகும். | தற்போது 2 வைப்பு கணக்குகளில் உள்ள கூட்டுத் தொகை ரூபா 11,049,841 இனை செயலற்ற மீதியாக அடையாளம் காணப்பட்டு சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் பரிந்துரைகளின் மீது 2024 ஆம் ஆண்டில் அரச வருமானத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. ரூபா 57,696,383 வைப்புத் தொகை தொடர்பாக குறித்த அமைச்சை அறிவூட்ட நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அதன் பிரகாரம் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்திலிருந்து வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளைப் பெற்றுக்கொள்ள உரிய நிறுவனம் விண்ணப்பித்துள்ளது. உரிய ஏற்பாடுகளை பெற்ற பிறகு இந்த திணைகளத்திலிருந்து கட்டுநிதி விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதன் பிரகாரம் இந்த வைப்புக் கணக்கின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட தொகை எதிர்காலத்தில் பயன்படுத்தப்படும்.<br>மேலும், எஞ்சிய 08 வைப்புக் கணக்குகளிற்குரியதாக நிலவும் ரூபா 39,365,503 ஆன வைப்புத் தொகையை உரிய விடயத்திற்கு பயன்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அமைச்சுகளிற்கு/ திணைக்களங்களிற்கு அறிவூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மானியங்கள், அவை வழங்கப்பட்ட நோக்கத்திற்காக ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்தல் அல்லது அவ்வாறு செய்ய முடியாதெனில் நி.பி 570 பிரகாரம் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு உரிய கணக்கில் அல்லது அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |

### 2.4 பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2023 திசெம்பர் 31 திகதியன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிகூற்றுக்களில் உள்ளடங்கப்பட்டுள்ள இணைப்பு iii இன் கீழ் காட்டப்பட்டிருந்த 2023 ஆம் ஆண்டிற்கான பொறுப்புகள் கூற்றில் ரூபா 235,957 இனை 2023 ஆண்டிற்குரியதாக செலுத்த வேண்டியிருந்த பொறுப்புகள் வெளிபடுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். | அனைத்து கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட முடியுமானவாறு ஒழுங்கான முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

#### 3.1.1 அரச கடன் கணக்கீடு செய்யப்படல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | வெளிநாட்டு அரச கடனை அறிக்கையிட பயன்படுத்தப்படும் கணனி தொகுதியின் CSDRMS 854-1 அறிக்கை மற்றும் அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களை ஒப்பிடுகையில் 2023 திசெம்பர் 31 திகதி கணக்கீடு செய்யப்படாத மொத்த வெளிநாட்டுக் கடனின் பெறுமதி ரூபா 15,823 மில்லியன் ஆகும். மேலும், அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களின் விளக்கக் குறிப்புகளின் (Explanatory Notes) கீழ் குறிப்பு இலக்கம் 24(II) மூலம் 2023 திசெம்பர் 31 திகதி கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் கடன்களின் மொத்த பெறுமதி ரூபா 17,103.2 மில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு மீளாய்வாண்டினுள் போன்றே அதற்கு முன்னைய ஆண்டுகளிளும் மாற்றப்பட்டுள்ள போதும் கணக்கீடு செய்யப்படாத கடன் பெறுமதிகள் நிலவுகின்ற காரணத்தால் 2023 திசெம்பர் 31 திகதி நிதி நிலைமை கூற்றில் வெளிநாட்டு கடன் பெறுமதி ரூபா 15,823 மில்லியன் குறைத்து காண்பிக்கப்படடிருந்தது. | கணக்கீடு செய்யப்படாத வெளிநாட்டுக் கடனின் பெறுமதி, மொத்த வெளிநாட்டுக் கடன் பெறுமதியில் 0.05 வீதம் மாத்திரம் ஆனதுடன் மாற்றப்படாத வெளிநாட்டு கடன்கள் தொடர்பாக உரிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு தொடர்ந்து அறிவுறுத்தல்களை வழங்கி அவற்றை கணக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்வதற்காக குறித்திற்கொண்டேன். அவ்வாறே அது தொடர்பாக அந்தந்த அமைச்சுகளில் மற்றும் திணைக்களங்களில் நிறுவப்பட்டுள்ள கணக்காய்வு அலுவலகங்களையும் அறிவூட்ட எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அரச கடன் பெறல் மற்றும் கடன் சேவை கணக்கீடு செய்தல் ஒழுங்குபடுத்துதப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கடன் இலக்கம் 2016035 தொடர்பான தவறான செலாவணி விகிதத்தைப் பயன்படுத்திய காரணத்தால் 2023 திசெம்பர் 31 திகதி அக்கடன் பெறுமதி ரூபா 962 மில்லியனால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். | -மேற்படி- |
| (இ) | CSDRMS 854-1 அறிக்கையின் பிரகாரம் கடன் இலக்கம் 2018003 தொடர்பாக 2023 ஆண்டிற்கு எவ்வித பிரதிபலன்கள் இல்லாத போதும், அரச நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 24(II) மற்றும் பாதீட்டு செயற்பாடுகள் மற்றும் குறை நிரப்பின் கீழ் குறிப்பு இலக்கம் 11 இன் பிரகாரம் EUR 727,053 பிரதிபலன்கள் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. திணைக்களம் முன்வைத்த தகவல்களின் பிரகாரம் இக் கடன் தொகைக்குரியதாக 2022 ஆண்டினுள் அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகளில் பிரதிபலன்கள் 2023 ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்ட கடன் பெறுமதி EUR 335,930 மாத்திரம் ஆனது. அதன் பிரகாரம் இந்த கடன் தொகை தொடர்பாக 2023 ஆண்டில் பெறக்கூடியவைகளிற்கு இடையே EUR 391,123 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | கடன் இலக்கம் 2018003 தொடர்பாக EUR 391.123 ஆன வித்தியாசமாக காட்டப்பட்டுள்ள மாற்றப்பட்ட பெறுமதி 2023 ஜுன் மாதம் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் இந்த திணைக்களத்திற்கு அறிவித்துள்ளதுடன் அது 2023 ஆகஸ்ட் மாத கணக்கு பொழிப்பறிக்கை மூலம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஈ) | CSDRMS 854-1 அறிக்கையின் படி கடன் இலக்கம் 2022011 தொடர்பாக மீளாய்வாண்டில் USD 131,000,000 பிரதிபலன்கள் ஆகியிருந்ததுடன், திணைக்களம் வழங்கிய தகவல்களின் பிரகாரம் இந்த கடன் தொகைக்குரியதாக கடந்த ஆண்டுகளில் பிரதிபலன் ஆகி 2023 ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்ட கடன் பெறுமதி USD 434,861 ஆகும். இதன் படி மீளாய்வாண்டில் இந்த கடன் உடன்படிக்கைக்கு உரியதாக கணக்கீடு செய்யப்பட்டுள்ள மொத்த கடன் பெறுவனவுகளின் பெறுமதி USD 131,434,861 ஆன போதிலும், அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் அது USD 133,765,136 ஆகக் காட்டப்பட்டுள்ளது. | 2022011 கடன் இலக்கத்தின் கீழ் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் அ.டொ. 181,000,000 மாற்றப்பட்டதாக 2023 சனவரி மாதம் மற்றும் மார்ச் மாதம் இந்த திணைக்களத்திற்கு அறிக்கையிட்டுள்ளதுடன் அவற்றில் அ.டொ 133,330,274.99 மற்றும் கடந்த ஆண்டுகளில் கணக்கீடு செய்யப்படாத அ.டொ. 434,861 உள்ளடங்கனாக அ.டொ. 133,765,136 அரசாங்க திதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (உ) | அரச நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 24(II) மற்றும் பாதீட்டு செயற்பாடுகள் மற்றும் நிலுவை குறைநிரப்பின் கீழ் குறிப்பு எண் 11 இன் படி கடன் இலக்கம் 2017034 க்குரியதாக EUR 77,385 எதிர்மறையான பிரதிபலன் இருந்த போதிலும், CSDRMS 854-1 அறிக்கையில் அவ்வாறான எதிர்மறையான பிரதிபலன் காணப்படவில்லை. | 2022 ஆண்டில் திரட்டப்பட்ட யூரோ 468,861.85 தொகை அதாவது ரூபா 180,665,083 தொகை 2022 திசெம்பர் மாதம் கணக்கு பொழிப்பின் ஊடாக கணக்கிடப்பட்டுள்ளது. வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் 2023 பெப்ரவரி மாதம் 391,477.35 யூரோக்கள் மற்றும் ரூபா 150,846,753 ஆக திருத்தப்படுவதாக இந்தத் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளது.<br><br>இந்த திருத்தத்தின்படி கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த தொகையான யூரோ 77,384.05 அதாவது ரூபா 29,818,329 தொகையை ஆகஸ்ட் மாத கணக்கு பொழிப்பில் சரி செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்மறையான பிரதிபலனாக அரச நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஊ) | அரசாங்க நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 24(II) இல் உள்ளடங்கப்பட்டுள்ள வெளிநாட்டு நாணய அலகின்படி ஆரம்ப கடன் மீதிக்கு மீளாய்வாண்டினுள் பிரதிபலன்கள் சேர்த்த பின்னர் மற்றும் மீளாய்வாண்டினுள் கடன் செலுத்துதல்களைக் கழித்த பின்னர் இறுதிக் கடன் மீதிக்குச் சமமாக வேண்டிய போதும், அவ்வாறு சமமற்ற 06 கடன் உடன்படிக்கைகளிற்குரியதாக ரூபா 107 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 2009007 கடனளிப்பளருடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பீட்டின் போது 2015.08.24 அன்று பதிவு செய்யப்பட்ட தவறான பெறுமதிகள் 2023 பெப்ரவரி மாதம் சரி செய்யப்பட்டுள்ளதுடன் அது அரசாங்க நிதிக்கூற்றுக்களிலும் செம்மையாக்கப்பட்டுள்ளது.<br><br>2010117 மற்றும் 2010121 ஆகிய இரண்டு கடன் இலக்கமும் அமெரிக்க டொலர்களில் பெற்றுக்கொண்டிருந்த இரண்டு கடன் ஒப்பந்தங்கள் ஆவதுடன் பின்னர் XDR ஆக மாற்றப்பட்டது. அந்த இரண்டு கடன் இலக்கங்களிற்குரியதாக கடன் மீள் செலுத்துதல் முடிந்ததும், செலாவணி மாற்றத்தில் இடம் பெற்ற மாற்றம், வெளிநாட்டு வளத் திணைக்களத்தினால் CSDRMS தொகுதியில் சரி | -மேற்படி- |

செய்யப்பட்டுள்ளதுடன் அது அரசாங்க நிதிக்கூற்றுக்களிலும் செம்மையாக்கப்பட்டுள்ளது.

1983 ஆம் ஆண்டு பெறறுக்கொண்ட 1983008 கொண்ட கடன் தொகை 2005 ஆம் ஆண்டில் மறுசீரமைக்கப்பட்டதுடன் இதனால் ஏற்பட்ட வேறுபாடு வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் CSDRMS தொகுதியில் சரி செய்யப்பட்டுள்ளதுடன். அது 2023 இறுதி அறிக்கை ஊடாக அரசாங்க நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கப்பட்டுள்ளது. 2002054 கொண்ட கடன் தொகையானது பிரெஞ்சு பிராங்க் பரிமாற்ற விகிதத்தில் பெறப்பட்டு பின்னர் யூரோ பரிமாற்ற விகிதத்திற்கு மாற்றப்பட்டது. கடன் தொகையை செலுத்தி முடியும் போது குறித்த மாற்றத்தில் ஏற்பட்ட வித்தியாசம் மற்றும் 2002055 கடன் தொகையும் பிரெஞ்சு பிராங்க் பரிமாற்ற விகிதத்தில் எடுக்கப்பட்டு பின்னர் யூரோ பரிமாற்ற விகிதத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. கடனளிப்பாளருடன் மேற்கொள்ளப்பட்ட மீதி ஒப்பீட்டின் போது இனங்காணப்பட்ட வேறுபாடு பரிமாற்ற மாற்றத்தின் போது ஏற்பட்ட மாறுபாடாகக் கருதப்பட்டு 2023 பெப்ரவரி மாதத்தில் CSDRMS தொகுதியில் செம்மையாக்கப்பட்டுள்ளதுடன் அரசாங்க நிதிக்கூற்றுக்களிலும் சரி செய்யப்பட்டுள்ளது.

.

| | | | |
|---|---|---|---|
| (எ) | அரசாங்க நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 24(I) இனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு நாணய வங்கி அலகு கருத்திட்ட கடன் மீதிகளிற்கு (Foreign Currency Banking Unit Loan (Project) Balances) | இந்த கடன் தொகை அ.டொ னால் பராமரிக்கப்பட்ட போதும் கடன் மீள் செலுத்தப்படுவது இலங்கை ரூபாவிலாகும். ஆவ்வாறு 2022 ஆம் ஆண்டில், இலங்கை | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| | உரிய CS-DRMS 854-1 அறிக்கையுடன் பரீட்சிப்பின் போது, 2017045 கொண்ட கடன் ஒப்பந்தத்திற்குரியதாக 2022 திசெம்பர் 31 திகதிக்கு மற்றும் 2023 சனவரி 01 திகதிக்கு USD 227,823 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்ட போதும், அதன் உள்ளூர் நாணய பெறுமதியில் எவ்வித வித்தியாசமும் அவதானிக்கப்படவில்லை. மேலும், அரசாங்க நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் திரும்ப செலுத்தப்பட்ட அமெரிக்க டொலர் 332,704 தொகை உள்ளூர் நாணயமாக பரிமாற்றும் போது USD 1 இனை ரூபா 524.6050 ஆக அசாதாரண அந்நிய செலாவணி வீதம் பயன்படுத்தப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது. | ரூபாயில் திருப்பிச் செலுத்தப்பட்ட தொகை அ.டொ. ஆக பரிமாற்றம் செய்யும் போது தவறான அந்நிய செலாவணி வீதம் பயன்படுத்தப்பட்ட காரணத்தால் CSDRMS அறிக்கையில் இந்தத் தொகைகளும் தொடர்புடைய அ.டொ பெறுமதியும் தவறான பெறுமானம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், அரசாங்க நிதிக்கூற்றுக்களிலும் அந்த அந்நிய செலாவணி வீதம் பயன்படுத்தப்பட்டதால் ஏற்பட்ட தவறை 2023 ஆம் ஆண்டில் கடனை மீள் செலுத்துவதன் மூலம் செம்மையாக்கி சரி செய்யப்பட்டுள்ளது. |

### 3.1.2 வெளிநாட்டு மானியம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 05 வெளிநாட்டு மானியங்களின் கீழ் (பண பெறுவனவு) ஆண்டுக்கான மொத்த வெளிநாட்டு மானியச் செலவினம் ரூபா 5,333 மில்லியனாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் தொடர்புடைய வைப்புப் பேரேட்டின் பிரகாரம் அச் செலவினத்தின் கூட்டுமொத்தம் ரூபா 5,302 மில்லியனானது. | வெளிநாட்டு மானியங்களாக பெறப்பட்ட பணத்தின் பாதுகாப்பு மற்றும் கணக்கீட்டு நடவடிக்கை மாத்திரம் இந்தத் திணைகளத்திற்குரியதானதுடன் செயற்படுத்தப்படும் தொடர்புடைய மானிய கருத்திட்டங்கள் அரச அமைச்சுகள்/திணைக்களங்களால் நடைமுறைப்படுத்தப்படுவதால் அந்த நிதி குறிப்பிட்ட நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படாதது உரிய அமைச்சு/திணைக்களங்களின் பொறுப்பாகும். | முதலீட்டாளர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் பெறப்பட்ட வெளிநாட்டு நிதி முதல் குறித்த நோக்கத்துக்கு இணைத்துக் கொள்வதை உறுதிப்படுத்த வேண்டும். |
| (ஆ) | 2023 சனவரி 01 திகதி அன்று இலங்கை அரசிற்கு விசேட மானியமாகப் பெறப்பட்டிருந்த போதும் 2023 திசெம்பர் 31 வரையும் உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் செயல் இழந்து காணப்பட்ட வெளிநாட்டு மானியங்களின் பெறுமதி ரூபா 107.6 மில்லியனானது. | தற்போது 2 வைப்பு கணக்குகளின் கூட்டுமொத்த பெறுமதி ரூபா 11,049,841 செயலற்ற மீதிகளாக அடையாளம் காணப்பட்டு உரிய அமைச்சு மற்றும் நிறுவனங்களின் பரிந்துரைகளின் மீது 2024 ஆம் ஆண்டில் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுத்துள்ளன | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | ரூபா 57,696,383 ஆன வைப்புத்தொகையுடன் கூடிய கணக்கு தொடர்பில் இந்த திணைக்களத்தினால் சம்பந்தப்பட்ட அமைச்சிற்கு அறிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அதன் பிரகாரம் முற்பணம் வெளியிடுவதற்காக உரிய அமைச்சினால் தேசிய வரவு செலவுத் திணைக்களத்திடம் இருந்து வரவு செலவுத் திட்ட ஏட்பாட்டைப் பெற்றுக்கொள்ள் விண்ணப்பித்துள்ளது. உரிய ஏற்பாடுகளைச் செய்த பின்னர் இத் திணைக்களத்திடமிருந்து முற்பணம் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அதன் பிரகாரம் இந்த வைப்புக் கணக்கின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட தொகை எதிர்காலத்தில் பயன்படுத்தப்படும்.<br><br>மேலும், எஞ்சிய 07 வைப்புக் கணக்குகளுக்குரியதாக காணப்படும் ரூபா 38,863,894 ஆன வைப்புத் தொகையை உரிய விடயத்திற்கு பயன்படுத்துமாறு இந்த திணைக்களத்தினால் உரிய அமைச்சுகள்/திணைக்களங்கள் அறிவூட்ட நடவடிக்கை எடுத்துள்ளது. | |
| (இ) | 2019 சனவரி 01 முதல் 2023 திசெம்பர் 31 வரை வெளிநாட்டு மானியத்தை பெற்றுக்கொள்வதற்காக பொது திறைசேரினால் ஒவ்வொரு 13 வெளிநாட்டு மானிய நிறுவனங்களுடன் கூடிய கூட்டுப் பெறுமதி 700,000 ஜப்பானிய யென், 132,710,000 யூரோ, 58,417,841 அமெரிக்க டொலர்,400,000 கொரியன் வொன், சீன யுவான் 2,000,000,000 மற்றும் ரூபா 4,545,750 வெவ்வேறு நாணயங்களினால் உடன்படிக்கை கைச்சாதிடப்பட்ட போதும், 2023 திசெம்பர் 31 இல் வெளிநாட்டு மானியங்கள் பெறப்பட்டதாக கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை. | வெளிநாட்டு மானியங்களைப் பயன்படுத்துவது தொடர்பான விவரங்கள் இந்தத் திணைக்களத்திடம் காணப்படாததுடன் அது தொடர்பாக தெளிவுபடுத்தல் வெளிநாட்டு வளத் திணைக்களத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளுமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன் | கிடைக்கப் பெற்ற வெளிநாட்டு மானியங்களை உச்ச பயனைப் பெறக்கூடிய வகையில் பயன்படுத்த நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

### 3.1.3 உபகடன்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 190,789,890,831 ஆன உபகடன் மீதியொன்று கிடைக்க வேண்டியதாக இருந்தது. குறித்த நிறுவனம் உபகடன் உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்தாததன் காரணமாக 03 நிறுவனங்களிற்குரியதாக 05 வருடங்களுக்கும் மேலாக ரூபா 1,316,324,489 நிலுவை உபகடன் மீதியொன்று காண்பிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். | அரசாங்க உபகடன் வழங்குதல், கட்டுப்பாடு மற்றும் உபகடன் சேவை கணக்கீடு செய்தல் முறையாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உப கடனுக்காக பெறவேண்டிய வட்டித் தொகை ரூபா 9,439,025,443 ஆனதுடன், 03 நிறுவனங்களிற்குரியதாக ஒப்பந்தங்களின் பிரகாரம் செலுத்தாத 05 ஆண்டுகளுக்கும் மேலாக செலுத்தப்படாத வட்டி பெறுமதி ரூபா 912,059,388 ஆக இருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். | -மேற்படி- |
| (இ) | 2023 ஜனவரி 01 திகதி அன்று 2 நிறுவனங்களுக்குரிய 4 உபகடன் ஒப்பந்தங்களின் கீழ் உள்ள உபகடன் மீதிகளின் தொகை ரூபா 114,487,221 களிலிருந்து மீளாய்வாண்டினுள் எவ்வித நிலுவைத் தொகையும் அறவிட முடியாதிருந்தது. | • சனச நிறுவனத்திடமிருந்து ரூபா 11,114,479 உபகடன் தொகை அறவிடப்படாததால் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.<br>• ரூபா 455,065 ஆன கடன் மீதி இலங்கை மத்திய வங்கியின் தகவல் தொழிநுட்பத் திணைக்களத்தினால் பராமரிக்கப்படும் முறைமைகளின் பிரகாரம் மீதியொன்று இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>• ரூபா 4,496 மீள் செலுத்துவதற்கு நிதி இல்லாததுடன், நிதியம் வட்டி வருமானமாக | -மேற்படி- |

திறைசேரி பிரதி செயலாளருக்கு நிதியை மாற்றியுள்ளது.

- ரூபா 102,913,181 ஆன தொகை இதற்கு முன் ஒரு சந்தர்ப்பத்தில் இலங்கை மத்திய வங்கியினால் உபகடன் உத்தேச திட்டத்தின் கீழ் நிலுவை கடன் மீதியாக அரசிற்கு கிடைக்க வேண்டிய தொகையாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு, இந்த கடன் உத்தேச திட்டம் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சிதிட்டத்தின் கீழ் நிதியளிக்கப்பட்டதுடன் அந்த மீதிகளும் இலங்கை மத்திய வங்கியின் பதிவேடுகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஈ) அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் மீளாய்வாண்டு ஆரம்பத்தில் மற்றும் இறுதியிலும் உள்ள உபகடன் மீதிகள், அதற்குரிய ஒவ்வொரு உபகடன் வழங்கிய நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன் மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்களின் பிரகாரம் உள்ள மீதிகளுடன் ஒப்பிடும் போது வேறுபாடுகள் காணப்பட்டன. அதன் பிரகாரம், அரசாங்கத்தின் நிதிநிக்கூற்றுக்களில் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியன்று உபகடன் மீதி ரூபா 78 மில்லியன் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

மீதிகளுக்கு இடையிலான மாறுபாட்டிற்கு பின்வரும் விடயங்கள் காரணமாகின்றன.

- பிராந்திய அபிவிருத்தி வங்கிக்கு விடுவிக்கப்பட்ட ரூபா 35,287,500 கடன் தொகை திறைசேரினால் விடுவிக்கப்பட்டது 2023.12.31 அன்று ஆன போதும் வங்கினால் அந்தத் தொகை 2024 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டமை.

- ரூபா 2,828,000 ஆன தொகை இத் திணைக்களத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது 2022.12.29 திகதியாவதுடன், கருத்திட்ட அலுவலகத்திலிருந்து இலங்கை வங்கிக்குக் அந்தத் தொகை கிடைத்துள்ளது 2023 ஆண்டில் ஆகுவதனால் அத் தொகை 2023 ஆண்டில் அவ் வங்கினால் செலுத்த வேண்டிய மீதிக்கு

-மேற்படி-

| | | | |
|---|---|---|---|
| | | சேர்க்கப்பட்டுள்ளது.<br><br>• ரூபா 7,440,000 ஆன தொகை இத் திணைக்களத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது 2022.12.29 திகதியாவதுடன், கருத்திட்ட அலுவலகத்திலிருந்து கொமஷல் வங்கிக்குக் அந்தத் தொகை கிடைத்துள்ளது 2023 ஆண்டில் ஆகுவதனால் அத் தொகை 2023 ஆண்டில் அவ் வங்கினால் செலுத்த வேண்டிய மீதிக்கு சேர்க்கப்பட்டுள்ளது. | |
| (உ) | அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உப கடன் மீதிகள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்கள பிரகாரம் கதிறைசேரிற்கு செலுத்த வேண்டிய உபகடன் மீதிகளை ஒப்பிடும் போது இரண்டு நிறுவனங்களிற்குரியதாக 2023 திசெம்பர் 31 திகதிக்குஂ அரசாங்க நிதிக்கூற்றுக்களில் உபகடன் மீதி ரூபா 229 மில்லியன் குறைவாக பதிவு செய்யப்பட்டுள்ளது | உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குரியதாக அரசாங்க நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 1,040,795,498 மீதியுடன் சமம் என்பதைக் நிறுவனத்தால் அனுப்பப்பட்ட மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தில் காண்பிக்கப்படும்.<br><br>• கொழும்பு மாநகர சபையுடன் தொடர்புடைய உபகடன் கணக்கின் மீதி 2,186,551,094 ரூபாவாக உள்ளதுடன், அந்த நிறுவனத்திற்கு மீதியை உறுதிப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், இதுவரை எந்த பதிலும் அனுப்பப்படவில்லை. | -மேற்படி- |

### 3.1.4 திறைசேரி உத்தரவாதங்கள் மற்றும் நிவாரண கடிதங்கள்

பின்வரும் அவதானிக்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆண்டில் மற்றும் அதற்கு முன்னர் முதிர்வடைந்திருந்த ரூபா 168,541.48 மில்லியன் மற்றும் அ.டொ. 59.88 மில்லியன் பெறுமதியான 17 திறைசேரி பிணைமுறி மற்றும் ரூபா 29,250 மில்லியன் மற்றும் அ.டொ. 200 | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். | வங்கி பிணைமுறி மற்றும் நிவாரணக் கடிதம் விநியோகிக்கும் செயன்முறையை முறையாக மற்றும் இற்றைப்படுத்தி |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் பெறுமதியான 9 நிவாரண கடிதங்களிற்குரியதாக 2023 திசெம்பர் 31 திகதியளவில் செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டு இருந்தன. | | பேணிக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் அரச நிதிக்கூற்றுக்களி பிரகாரம், வெளி நிறுவனங்களிற்கு 10 சந்தர்ப்பங்களில் விநியோகித்த ரூபா 115,977.35 மில்லியன் பெறுமதியான திறைசேரி பிணைமுறி மற்றும் 10 சந்தர்ப்பங்களில் விநியோகித்த ரூபா 28,838.4 மில்லியன் பெறுமதியான நிவாரணக் கடிதங்கள் 2023 திசெம்பர் 31 திகதியளவில் காலாவதியாகி உள்ளமை அவதானிக்கப்பட்டதுடன், குறித்த செல்லுபடியாகும் காலம் முடிவடைய முன்னர் முறையாக முடிவுறுத்த அல்லது செல்லுபடியாகும் காலத்தை நீடிக்க நவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த திறைசேரி பிணைமுறி மற்றும் நிவாரண கடிதங்களிற்குரிய செல்லுபடியாகும் காலம் கணக்காய்வு திகதியளவில் நீடிக்க நடவடிக்கை எடுக்காதது தொடர்பாக தற்போதைய நிலைமை பின்வருமாறு ஆகும்.<br><br>• இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம்<br><br>• 2024.04.08 திகதிய கூட்டத்தில் கலந்துரையாடியதன் பிரகாரம் இந்த நிலுவையை தீர்ப்பது தொடர்பான நடவடிக்கையை துரிதப்படுத்தி அதன் முன்னேற்றத்தை அறிக்கையிடுமாறு, இந்த திறைசேரி பிணைமுறி விநியோகிக்க அங்கீகாரம் வழங்கிய பொது முயற்சிகள் திணைக்களம் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திற்கு 2024.04.30 திகதிய கடிதம் மூலம் அறிவித்துள்ளது.<br><br>• இலங்கை அரச பெறுந்தோட்ட கூட்டுத்தாபனம்<br>பெறுந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளரின் கோரிக்கை மீது திறைசேரி பிணைமுறியின் செல்லுபடியாகும் காலத்தை ஓராண்டினால் நீடிக்க பொது முயற்சிகள் திணைக்களம் 2023.12.29 திகதிய கடிதம் மூலம் பரிந்துரைத்தது. அதன் பிரகாரம் திறைசேரி செயலளாளரின் அங்கீகாரத்தின் மீது 2024.01.05 திகதி செல்லுபடியாகும் காலத்தை 2023.10.16 முதல் 2028.12.31 வரை நீடிக்கப்பட்டது.<br><br>• நோர்த்சீ கம்பனி<br>2024.04.08 திகதிய கூட்டத்தில் நோர்த்சீ கம்பனியை தகுதியான முதலீட்டாளரிற்கு வழங்க வேண்டுமெனவும் நோர்த்சீ | வங்கி பிணைமுறி மற்றும் நிவாரணக் கடிதம் விநியோகிக்கும் செயன்முறையை முறையாக மற்றும் இற்றைப்படுத்தி பேணிக் கொள்ள வேண்டும். |

கம்பனியின் ஐந்தொகையை கவனத்திற் கொண்டு மறுசீரமைக்க பொருத்தமான தீர்மானமொன்றை எடுக்க இலகுவாகும் வகையில் ஏற்றுக் கொள்ளக்கூடிய மூன்று சந்தர்ப்பங்களை எடுத்து ஆய்வு செய்வதனை பொது முயற்சிக மறுசீரமைப்பு அலகினால் மேற்கொள்ள வேண்டுமெனவும் மறுசீரமைக்கும் முறைமையை தீர்மானித்து அதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தை பெறவும் விரைவில் அந் நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபை
  நாட்டில் நிலவும் பாதகமான பொருளாதார நிலைமை காரணமாக இருதரப்பு வெளிவாறி கடனிற்காக சேவை வழங்கலை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதாக செய்யப்பட்ட அரச அறிவிப்பின் பிரகாரம், கடன் சேவை வழங்குவதனை இடைநிறுத்தியுள்ளதுடன் 2022 ஏப்ரல் முதல் எவ்வித கொடுப்பனவும் செய்யவில்லையெனவும் இது தொடர்பாக நிலைமையை எதிர்காலத்தில் அறிவிப்பதாகவும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினால் 2023.07.19 திகதிய கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

- லிட்ரோ கேஸ் கம்பனி
  2023.09.30 திகதி இலங்கை வங்கியினால் அனுப்பிய திறைசேரி பிணைமுறி மீதி பட்டியல் பிரகாரம் இந்த திறைசேரி பிணைமுறி 2023.02.01 திகதியளவில் பூரணமாக செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2024.01.04 திகதி எமது கோரிக்கையின் பிரகாரம் இலங்கை வங்கியினால் ஆரம்ப திறைசேரி பிணைமுறியை 2024.01.18 திகதி

அனுப்பியுள்ளதுடன் அது தற்போது திறைசேரி பிணைமுறி பட்டியலிலிருந்து அகற்றப்பட்டுள்ளது.

- வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் எயார் லயின் கம்பனி 2024.01.11 திகதி பொது முயற்சி திணைக்களத்தில் இருந்து கிடைத்த பரிந்துரை பிரகாரம் 2024.01.18 திகதி இந்த இரண்டு பிணைமுறிகளின் செல்லுபடியாகும் காலம் 2023.11.11 இலிருந்து 2024.11.11 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

- இலங்கை பெற்ரோலிய கூட்டுத்தாபனம் அமைச்சரவை பத்திரம் இலக்கம் 24/0045/621/002 இற்காக 2024.01.25 திகதி அமைசரவை தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை பெற்ரோலிய கூட்டுத்தாபனத்திற்காக விநியோகிக்கப்பட்ட ரூபா 100 மில்லியன் திறைசேரி பிணைமுறியின் செல்லுபடியாகும் காலம், பொது முயற்சி திணைக்களத்தின் பரிந்துரை மற்றும் திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்தின் கீழ் 2024.02.12 திகதி ஓராண்டு காலத்திற்கு நீடிக்கப்பட்டது.

- கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் நிவாரண கடிதங்களின் செல்லுபடியாகும் காலம் ஏற்கனவே காலாவதியாகி உள்ளதுடன் இது தொடர்பாக குறித்த தர்ப்பினருடன் கலந்துரையாடி பொது திறைசேரிக்கு பாரமாகாதவாறு குறித்த நிலுவை தொகையை தீர்க்க விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு, இந்த திறைசேரி பிணைமுறி விநியோகிக்க பரிந்துரை வழங்கிய அபிவிருத்தி நிதித் திணைக்களத்திற்கு 2023.02.06 திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டது. அபிவிருத்தி நிதித் திணைக்களம் 2023.02.24 திகதிய கடிதத்தால் வியாபார வணிக மற்றும்

| | | |
|---|---|---|
| | உணவு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிற்கு இது தொடர்பாக அறிவித்துள்ள போதும் இது வரை பதில் கிடைக்கவில்லை.<br><br>• மிஹின் லங்கா கம்பனி<br>2024.03.21 திகதி பொது முயற்சி திணைக்களத்தில் இருந்து கிடைத்த பரிந்துரை பிரகாரம் 2024.03.28 திகதி இந்த பிணைமுறியின் செல்லுபடியாகும் காலம் 2024.12.31 வரை நீடிக்கப்பட்டுள்ளது.<br><br>• வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் எயார் லயின் கம்பனி<br>2023.12.31 திகதியளவில் காலாவதியாகியுள்ள போதும் 2024.01.11 திகதி கடிதம் மூலம் பொது முயற்சி திணைக்களத்தில் பரிந்துரை மீது மற்றும் திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பிரகாரம் இந்த நிவாரண கடிதங்களின் செல்லுபடியாகும் காலம் 2023.12.31 இலிருந்து 2024.12.31 வரை 2024.01.18 திகதி நீடிக்கப்பட்டுள்ளது. | |

### 3.1.5 உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டம்

23/1221/604/121 மற்றும் 2023 ஜூன் 28 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் உள்நாட்டுக் கடன் மறுசீரமைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை மத்திய வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,368,416,351,609 ஆன திறைசேரி உண்டியல்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் அரசிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 344,728,000,400 பெறுமதியான முற்பணங்கள், ரூபா 220,797,000,000 பெறுமதியான புதிய திறைசேரி உண்டியல்கள் மற்றும் ரூபா 2,492,347,352,009 பெறுமதியான மதிப்புள்ள புதிய திறைசேரி பிணைமுறியாக மாற்றப்பட்டிருந்தது. | இலக்கம் 23/1221/604/121 மற்றும் 2023.06.28 திகதிய அமைச்சரவை முடிவுகளின் பிரகாரம் மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டதுடன் அதன் பிரகாரம் கணக்காய்வு அவதாணிப்புடன் இணங்குகிறேன். | ஒரு தகவல் விளக்கக்காட்சி. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கூட்டுமொத்தம் ரூபா 3,204,461,897,219 ஆக காண்பிக்கப்பட்ட திறைசேரி பிணை முறிகள் 2023 செப்டம்பர் 14 ஆம் திகதி புதிய திறைசேரி பிணை முறிகளாக மாற்றப்பட்டிருந்தது. | இலக்கம் 23/1221/604/121 மற்றும் 2023.06.28 திகதிய அமைச்சரவை முடிவுகளின் பிரகாரம் மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டதுடன் அதன் பிரகாரம் கணக்காய்வு அவதாணிப்புடன் இணங்குகிறேன். | |
| (இ) | அ டொ. 788,237,384 பெறுமதியான இலங்கை அபிவிருத்திப் பிணை முறிகள் 2023 ஆகஸ்ட் 15 ஆம் திகதி திறைசேரி பிணை முறியாக மாற்றப்பட்டிருந்தது. | இலக்கம் 23/1221/604/121 மற்றும் 2023.06.28 திகதிய அமைச்சரவை முடிவுகளின் பிரகாரம் மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டதுடன் அதன் பிரகாரம் கணக்காய்வு அவதாணிப்புடன் இணங்குகிறேன். | -மேற்படி- |
| (ஈ) | அரசாங்க உள்நாட்டு சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அந்நிய செலாவணி வங்கிகளிற்குரியதாக மக்கள் வங்கியிடமிருந்து பெற்றுக் கொண்டிருந்த 85,943,611 அ. டொ. கடன் தொகை 2023 நவம்பர் 11 ஆம் திகதி திறைசேரி பிணை முறியாக மாற்றப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். | -மேற்படி- |
| (உ) | மேலும், மேற்படி சட்டத்தின் கீழ் இலங்கை வங்கியிடமிருந்து பெறப்பட்ட யு.எஸ்.டி. 240 மில்லியன் அந்நிய செலாவணி வங்கி அலகு கடன் மறுசீரமைப்பிற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் 2023 நவம்பர் 02 திகதி கைச்சாதிடப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். | -மேற்படி- |

**4 மனித வள முகாமைத்துவம்.**

**4.1 இணைக்கப்பட்ட ஆளணி மற்றும் உண்மையான ஆளணி**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் சிரேஷ்ட மட்ட பணிப்பளர் நாயகம், பணிப்பாளர், பிரதி பணிப்பாளர்/ 09 உதவி பணிப்பாளர்களும், 15 இரண்டாம் மட்ட அலுவலர் பதவிகளும் மற்றும் 05 ஆரம்ப மட்டத்திலான பதவிக்ளும் வெற்றிடங்களாக காண்பிக்கப்பட்டிருந்தன. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகிறேன். | திணைக்களத்தின் பணிப்பொறுப்பை நிறைவேற்ற முக்கிய பதவிகளின் வெற்றிடங்களை நிரப்பவும், தேவையற்ற பதவிகள் இருப்பின் அவற்றை திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |